**இரண்டாம் ஆண்டு: மூன்றாம் பருவம்**
**தாள் : காப்பியமும் நாடகமும்: பாடக்குறியீடு 16LCT3**
**அலகு: 1.2 மணிமேகலை**

**சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகிய காதை**

**நூல் அறிமுகம் :**

❖ சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக்காப்பியங்கள்.ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. இருகாப்பியங்களும் ஒரே காலத்தைச்சேர்ந்தது. நூலாசிரியர் இருவரும் நண்பர்கள்.
❖ கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த குழந்தை மணிமேகலை. இவளே இக்காப்பியக்கதையின் தலைவி. இந்நூலை இயற்றியவர் சீத்தலைச்சாத்தனார் 30 கதைகள் இடம் பெற்றுள்ள இந்நூல் புத்தமதக் கருத்துகளை எடுத்துரைக்கிறது. தமிழ் மொழியில் தோன்றிய முதல் சமயக்காப்பியம் ஆகும். இந்நூலில் நமக்குப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ள சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை பற்றிய செய்திகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

**காதைச்சுருக்கம் :**

❖ சோழ நாட்டு இளவரசன் உதயகுமரன் சம்பாபதி கோவிலின் முன்சென்று மணிமேகலையைத் தமக்கு அடையாளம் காட்டுமாறு வேண்டுகிறான்.அங்கொரு சித்திரம் “ நீ ஆராயமால் சூள் உரைத்தனை ’’ என்று கூறுகிறது. அவன் அங்கிருந்து நீங்குகிறான். காயசண்டிகையின் உருவத்துடன் மணிமேகலை பல தர்மகாரியங்களைச் செய்து வருகின்றாள். சிறைச்சாலையில் உள்ளவர்களுக்கு உணவளிக்கிறாள். இதனைக்கண்ட சிறைக்காவலர் மன்னனுக்கு அறிவிக்க, மன்னன் சிறைச்சாலையை மணிமேகலையின் வேண்டுகோளுக்கு இணங்கி அறச்சாலையாக ஆக்கினான்.

**காயசண்டிகையின் வடிவில் தொண்டு :**

உறையுள் குடிகை உள்வரிக் கொண்ட
…………………………………………
ஆற்றா மாக்கட்கு ஆற்றும் துணையாகி (29-35)

❖ சம்பாபதி தெய்வம் உறையும் சிறிய கோயிலில், வேற்று வடிவம் கொண்ட குற்றமற்ற செய்கையை உடைய மணிமேகலை, “ மாதவியின் மகளாகவே ஊரம்பலத்தில் சுற்றிக்கொண்டிருந்தால் என்னை அடைய விரும்பும் மன்னன் மகன் கைவிடாமல் என்னைப் பற்றுவான்’’ என்று சிந்தித்து ஊரார் அனைவருக்கும் நன்கு தெரிந்த யானைத் தீ எனும் பசி நோயால் வாடும் காயசண்டிகையைப் போல் உருவங்கொண்டு வறியோர்க்கு உதவினாள்.

**சிறையில் செய்த சேவை (36-46) :**

- வாங்குதலும் கொடுத்தலும் இரப்போர் கடமையாகும். இருப்பினும் வறியோரைத் தேடிச்சென்று வலிந்து கொடுத்தலே மிகுதியான சிறப்பு என கல்வியில் சிறந்த சான்றோர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர் என்று கருதினாள். ஆகவே சம்பாதி கோயிலின் உள்ளே இருந்த அமுத சுரபியை தன் அழகிய கையில் கொண்டு நகரமக்கள் அனைவருக்கும் பசிப்பிணியைப் போக்க ஊரெங்கும் திரிந்தாள்.
- ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த மன்னனனுக்கும் பெரியோருக்கும் பிழை செய்தாரைத் தண்டித்து விதித்த தண்டனையை நிறைவேற்றும் சிறைச்சாலையின் உள்ளே மணிமேகலை விருப்பத்தோடு சென்றாள். அங்கே கொடிய பசியால் வாடி வருந்தும் ஆருயிர் மக்களுக்கு அவர்கள் பெறும் கை வருந்துமாறு வாரி வாரி உணவு வழங்கினாள்.
  முதியாள் கோட்டம் - சம்பாபதி கோவில்.

**காவலர் மன்னனுக்குச் செய்தி தெரிவித்தல் (47 -50 ):**

- பலருக்கும் உணவு அளித்த பாத்திரம் ஒன்றே! எடுக்க எடுக்க குறையாது சோறு போடுகிறதே! என்று சிறைக்காவலர் வியந்தனர். இந்த அமுத சுரபியின் கொடைத்திறத்தையும் அதை உடைய காயசண்டிகை (மணிமேகலை)யின் செய்தியையும் அரசர் பெருமானுக்கு உறுதியுடன் கூற விரைந்தனர்.

**இந்திரன் போல் இருந்தான் (107-116) :**

- சோழ மன்னனின் மண்டபமானது, மகத நாட்டு மணி வேலைக்காரரும், மகாராட்டிரத்தில் பிறந்த பொற்கொல்லரும், அவந்தி நாட்டுக்கொல்லரும், யவன நாட்டுத் தச்சரும், தமிழ்நாட்டில் தோன்றிய தொழில் வல்லுநரும் சேர்ந்து நல் உள்ளத்தோடு அமைக்கப்பட்ட கண்ணைக்கவரும் சிறப்பினையுடைய அம்மண்டபத்தின் உள்ளே பவளத்தால் செய்யப்பட்ட தூண்களும், பல்வகை மணிகளால் பதிக்கப்பட்ட போதிக்கைக்கட்டைகளும், வெண்மையான முத்து மாலைகளும் தொங்க விடப்பட்டிருந்தன. மேலும் அழகான கூடல்வாய் பொருத்தபட்டிருந்தன. மண்டபத்தின் உள்ளே உள்ள மேற்கூரைப் பொன்னால் வேயப்பட்டிருந்தது. பசுமையான பொன்னால் கீழப்பகுதி அமைந்திருந்த இந்த அழகிய மண்டபத்தில் சோழ மன்னன் இந்திரனுடைய செல்வத்தைப் பெற்ற இந்திரன் போல் இனிதாக அமர்ந்திருந்தான்.

போதிகை : தூணின் மேல் உத்திரம் முதலியவற்றைத்தாங்கும் கட்டை
கோணச்சந்தி: கூடல்வாய் (அ) கூட்டுவாய்; இணைப்பு

**வாழ்க, எம் மன்னர் (117 -130) :**

- சிறைக்காவலர் பொன் மண்டபத்து வாயில் காப்போருக்கு மன்னனைக் காண வேண்டும் என்று உரைத்தனர். வருமாறு மன்னவன் அருள, மண்டபத்தினுள் சிறைக்காவலர் அரசன் இருக்கைக்குச் சற்று சேய்மையில் நின்று பணிவோடு

முறையாக வணங்கினர். பின்பு மண்ணாசை அடங்கமால் பகைமையில் உள்ளதைச் செலுத்தி போருக்கு எழுந்தான். அவனுக்கு துணையாக முறம் போன்ற காதுகளை உடைய யானையும், தேரும், குதிரையும் மிக்க வலிமையுடைய வாள் படை ஏந்திய போர் மறவரும் செறிந்த முதலில் செல்வதாகிய தூசிப்படையோடு வஞ்சியிலிந்து வஞ்சி மாலை சூடிய சேரனும், மீன் கொடியுடைய பாண்டியனும் போருக்கு வந்து நின்றனர். காரியாற்றங்கரையில் போர் நடந்தது.அப்போரில் ஆத்திமாலை சூடியவனும் வலிய கைகளையுடையவனும் ஆன இளங்கோவினால் சேர பாண்டியரின் வில்லும் கயலும் ஆகிய நெடிய கொடிகளைக் கைப்பற்றினாய். அத்தகைய வலிமை மிக்க பெருங்கைகளையுடைய எங்கள் சோழமன்னன் வாழ்க! உயிர்காக்கும் வெண் கொற்றக்குடை உடைய எங்கள் கொற்றவனே நீ பல்ஊழி காலம் புகழோடு வாழ்க! எங்கள் இறைவனாகிய மன்னர் பெருந்தகையே! வாழ்க நீ! கெடுக நின் பகைவர் அரசே இதனைக் கேட்பாயாக.

| | | |
|---|---|---|
| சேய்மை | - | தூரம் |
| தலைத்தார்ச் சேனை | - | தூசிப்படை |
| இளங்கோ | - | நலங்கிள்ளி |
| சோழன் | - | மாவண்கிள்ளி |

**<u>எம் அரசே, கேட்பாயாக(131-138)</u>**

❖ இப்பெரும் புகார் நகரத்தில் யானைத் தீ என்னும் பசிப்பிணியால் சோர்ந்து உடல் வாடிய ஒரு விஞ்சை மகள் வீதிகளில் சுற்றிக்கொண்டிருந்தாள்.அவள் இப்பொழுது அரியசிறைச்சலையின் உள்ளே நுழைந்திருக்கிறாள். பெரிய புகழையுடைய மன்னனே உனது பெயரை வாழ்த்தித் தன் கையகத்திலிருக்கும் ஒரே ஒரு பிச்சைப் பாத்திரத்தால் அவளை மொய்க்கும் மக்கள் அனைவரும் உண்ணும்படி அள்ளி அள்ளி உணவளிக்கிறாள். எம்முடைய கோவே! உலகம் காத்து, ஊழிதோறும் ஊழிதோறும் வாழ்க! என சிறைக்காவலர் வாழ்த்தி உரைத்தனர்.

| | | |
|---|---|---|
| வம்பமாதர் | - | புதுமையானப் பெண் |
| யானைத்தீ | - | மிகுதியானப் பசி நோய் |
| ஐயப்பாத்திரம் | - | பிச்சைப்பாத்திரம்(அமுதசுரபி) |

**<u>நீ யார்? பாத்திரம் கிடைத்தது எவ்வாறு(139-145)</u>**

❖ மன்னன் அப்படியாயின் அம்மங்கை நல்லாள் இங்கே வருக! வருக! என அருள்புரியும் நெஞ்சத்தோடு அரசன் ஆணையிட்டான். வாயில் காவலர் காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலையை அழைத்து வந்தனர். ஆராய்ந்த வீரக்கழலை அணிந்த மன்னவனது அருள் வாழ்க! என்று கூறினாள். பொறுத்தற்கு அரிய தன்மைகளையுடைய தவநெறியை உடையவளே நீ யார்? உன் கையிலிருக்கும் இப்பாத்திரம் எங்கே கிடைத்தது? என்று மன்னன் வினவினான்.

| | | |
|---|---|---|
| கடிஞை | - | பாத்திரம் |

## தெய்வம் தந்தது இது(146-154)

❖ மணம் பொருந்திய மாலையை அணிந்த மன்னவா! நீ நீடுழி வாழ்வாயாக! நான் ஒரு வித்தியாதர மங்கை. இந்திர விழாவால் அழகு பெற்று விளங்கும் இம்மூதூரில் என் தீய வினையால் சுற்றித்திரிந்தேன்.(உதய குமரனுக்கு அஞ்சி வேற்றுருக்கொண்டு திரிகிறேன்). அரசர் பெருந்தகையே வாழ்க! வானம் பிழையாது மழை பொழிக! புவியில் வளம் பெருகுக! அரசனுக்கு தீது இன்றி நன்மை உண்டாகுக! இது ஓர் பிச்சைப்பாத்திரம், ஊரம்பலத்தில் உள்ள ஒரு தெய்வம் தந்தது. தெய்வத்தன்மையுடையது. யானைத் தீ என்னும் அரிய பசி நோயைப் போக்கியது. மெலிந்த உடம்புடைய மக்களுக்கு இது உயிர்காக்கும் மருந்து என மணிமேகலை கூறினாள்.

விஞ்சை மகள் - மந்திரத்தால் உருமாறிய மகள்
விழவு அணி - இந்திரவிழா
வஞ்சம் திரிந்தேன் - தீய வினையால் திரிந்தேன்
ஐயக்கடிஞை - பிச்சைப்பாத்திரம்
யானைத்தீ - போக்குதற்கு அரிய பசிநோய்

## சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆதல்(155-162)

❖ சோழமன்னன் இளங்கொடிக்கு நான் செய்ய வேண்டியது யாது? என்றான். சிறைச்சலையை அழித்து அருள் உள்ளமுடைய அறவோர் வாழும் அறச்சாலையாக ஆக்குக! அச்செயலே நீவிர் செய்யக்கூடியது என்று மெல்லியலாள் கூறினாள். ஆயிழையின் அறிவுரையைக் கேட்ட மன்னன் அப்பொழுதே சிறையில் இருந்தோரை விடுவித்து மணிமேகலை கூறிய பெருந்தவத்தோர் பலரால் அறமும் ஞானமும் ஆகிய ஒழுக்கங்களை எய்துமாறு சிறைக்கோட்டத்தைக் கறைப்பட்டோர் இல்லாத அறக்கோட்டமாக்கினான்.

சீத்து - நீக்கி
ஆயிழை - பெண்

## வினா வங்கி

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே இத்தொடர் இடம் பெற்றக் காப்பியம்

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சீவகசிந்தாமணி
ஈ) கம்பராமாயணம்

2. தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம்

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) சூளாமணி
ஈ) நீலகேசி

3. மணிமேகலையில் இடம்பெற்ற காதைகள்

அ) 30 ஆ) 20 இ) 10 ஈ) 40

4. அமுதசுரபி இடம்பெற்ற காப்பியம்
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) நீலகேசி
ஈ) குண்டலகேசி
5. யானைத் தீ நோய்க்கு துன்புற்றது
அ) மணிமேகலை ஆ) காயசண்டிகை இ) மாதவி ஈ) சுதமதி

## II இரண்டு மதிப்பெண் வினாக்கள் :

1. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகக் கருதப்படும் காப்பியம் எது?
2. மணிமேகலை நூல் குறிப்பு தருக?
3. இரட்டைக்காப்பியங்கள் யாவை?
4. புத்தமதக் கருத்துக்களை கூறும் நூல் எது?
5. மணிமேகலை காப்பியத்தின் ஆசிரியர் யார்?
6. மணிமேகலை காப்பியத்தின் வேறுபெயர்கள் யாவை?
7. சீத்தலைச்சாத்தனார் தாம் இயற்றிய நூலுக்கு இட்டபெயர் யாது?
8. காயசண்டிகைக்கு ஏற்பட்ட (சாபம்) நோய் யாது?
9. காய்பசியாட்டி யார்?
10. இரப்போர் கடன் யாது?
11. இந்திரன் போல இருந்தது யார்?
12. ஐயக் கடிஞை யாது?
13. காயசண்டிகை வடிவில்தொண்டு செய்தது யார்?
14. சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கியது யார்?
15. சோழ மன்னனின் பொன் மண்டபத்தைக்கட்டிய வல்லுநர்கள் யாவர்?
16. உதயகுமரன் வணங்கிய தெய்வம் எது?
17. சமுதாய சீர்திருத்தக்களஞ்சியம் எது?
18. மணிமேகலைக் காப்பியம் உணர்த்தும் கருத்துகள் யாவை?
19. சம்பாபதி கோயில் சிற்பம் உதயகுமரனிடம் யாது கூறியது?
20. காயசண்டிகையின் நோயைப் போக்கியது யார்?
21. ஊன்உடை மாக்கட்கு உயிர்மருந்து எது?
22. சீத்தலைச்சாத்தனாரின் நண்பர் யார்?
23. மணிமேகலைக் காப்பியத்தின் காலம் எது?
24. கதைத்தலைவியின் பெயரால் இடம்பெற்ற முதற்காப்பியம் எது?
25. குடிமக்கள் காப்பியம் எது?

## III ஒரு பக்க அளவில் விடை தருக :

1. காயசண்டிகை வடிவில் மணிமேகலை செய்த செயல்பற்றி எழுதுக.
2. மன்னனுக்கும் மணிமேகலைக்கும் இடையே நடைப்பெற்ற உரையாடலை எழுதுக.

## IV கட்டுரை வடிவில் விடை தருக :

1. சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதையை விவரி.

2. மணிமேகைலையில் இடம்பெற்றுள்ள அறச்செயலை நும்பாடப்பகுதி கொண்டு விளக்குக.

**விடைகள் :**

**I**

1. மணிமேகலை
2. மணிமேகலை
3. 30
4. மணிமேகலை
5. காயசண்டிகை

**II**

1. மணிமேகலை
2. தமிழில் தோன்றிய முதல் சமயக்காப்பியம். இதன் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார் கோவலன்-மாதவி இவர்களின் புதல்வி மணிமேகலையின் துறவு, பற்றியும் அறச்செயல்கள் பற்றியும் கூறும் நூல்.
3. சிலப்பதிகாரம், மணிமேகலை
4. மணிமேகலை
5. சீத்தலைச்சாத்தனார்
6. மணிமேகலைத்துறவு. சமுதாய சீர்த்திருத்தக்களஞ்சியம் குடிமக்கள் காப்பியம்.
7. மணிமேகலைத்துறவு
8. யானைத் தீ நோய் (தீராத பசி நோய்)
9. காயசண்டிகை
10. ஏற்றலும் இடுதலும் (வாங்குதலும், கொடுத்தலும்)
11. சோழ மன்னன்
12. பிச்சைப்பாத்திரம் ( அமுதசுரபி)
13. மணிமேகலை
14. மணிமேகலை
15. மகதநாட்டு மணிவேலைக்காரர்
    மராட்டிய பொற்கொல்லர்
    யவனநாட்டு தச்சர்
    தமிழ்நாட்டு தொழில் வல்லுநர்
    அவந்திநாட்டு கொல்லர்
16. சம்பாபதி
17. மணிமேகலை
18. பரத்தை ஒழிப்பு, மது ஒழிப்பு, சிறை ஒழிப்பு, சாதி ஒழிப்பு
19. நீ ஆராயாமல் சூள் உரைத்தனை
20. மணிமேகலை
21. அமுதசுரபி தரும் உணவு
22. இளங்கோவடிகள்
23. கி.பி. 2ஆம் நூற்றாண்டு
24. மணிமேகலைக் காப்பியம்
25. மணிமேகலை